# திருப்பள்ளியெழுச்சி

திருவெம்பாவை 20 பாடல்களும் திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்களும், பேராசிரியர் ஆ.சா. ஞானசம்பந்தம் அவர்கள் திருவாசக விருந்து என்ற புத்தகத்தில் திருவாசகத்திற்கு விளக்கம் எழுதியுள்ளார். அதிலிருந்து

(திரோதான சுத்தி)

திரோதான சுத்தி என்பது மறைவு, நீக்கம். நம்முள் மறைந்திருக்கும்ஈசனை நாம்தெரிந்து கொள்ளச் செய்வது ஆகும்! விழுமிய முழுமுதற்சிவன் உலகு உயிர்களை நடப்பாற்றலின் கண் ஒடுக்கி,அந் நடப்பாற்றலினைத்தன் திருவடிக்கண் ஒடுக்கியருளும் திருக்குறிப்பே திருப்பள்ளி எழுச்சியாகும். மீட்டும் அம் முறையே விரிந்து செயலுற்று விளங்கச் செய்யவதே திருப்பள்ளியெழுச்சியாகும்.

இவ்வுண்மையினை நாம் நன்கு உணர நாளும் திருக்கோயில்களில் திருப்பள்ளியெழுச்சித்திருவிழா நடத்திக் காட்டுகின்றனர். மணிவாசகப் பெருமான் திருப் பெருந்துறையில் எழுந்து அருளியிருந்தபொழுது, விடியற்காலத்தில் இறைவனைத் துயில் எழுப்புவதாகத் திருப்பள்ளி எழுச்சி என்னும் இதனை அருளிச்செய்தார். வைகறையில் இருள் நீங்க ஒளி எழுவது போல் ஆன்மாக்களுடையதிரோதன மலம் அகலஞானவொளி வெளிப்படுகின்ற முறைமையை விளக்கி அருளிகின்றார்! நம் அறிவுத் துயிலைத் தட்டி எழுப்பி அவன் பெருமைக் கூறி எழுப்பும்பாடல்கள் இவை. மேலும் பெருமானே! நீ பள்ளி துயில் அழகு பருகினோம். திருவோலக்கமண்டபத்துள்உன் காலைக் காட்சி காண நானும் உன் பரிவாரப் பெண்களும் அன்பரும் அவாவோடு காத்திருக்கிறோம் என்று எழுப்புவது, தலை மகனும் புணர்ச்சி வேட்கையில் துயில் நீட்டுவதைத் தலைமகளும்தோழியும்தட்டி எழுப்பும் பகுதியே இந்தப் பத்து பாடல்களுமாம்.

அன்பறிவாற்றல்கள் தொழில் படுமாறு இறைவனின் அன்பறிவாற்றல்களைத் துணைபுரியுமாறுஇணையடி தொழுது வேண்டிக் கோடலே திருப்பள்ளியெழுச்சியாகும். தமோ குணத்தில் மனிதன் உறக்கத்திற்கு அடிமையாகின்றான் தமோகுணத்திற்கு அடிமையாகிஉறங்கிக் கொண்டிருக்கின்ற மனிதனை அவ் உறக்கத்தினின்றும் எழுந்திருக்கச் செய்து அவன்உள்ளத்தில் செயலற்றுக் கிடக்கின்ற ஆன்மீக உணர்வை எழுச்சி பெறச் செய்வதுதான்பள்ளியெழுச்சிஎனப்படும்.

இயற்கையில் சத்துவகுணம் ஓங்கி இருக்கும் பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்திருக்கவேண்டும்.அருளாளர்கள் அருளிச் செய்துள்ள அருட்பாக்களை உணர்வோடு ஓத வேண்டும். அப்பொழுது நம்உள்ளத்தில் உள்ள அருள் உணர்வு வெளிப்படுகிறது. காலைக் கதிரவன் வருகை, புற இருளைப் போக்குவது போன்று, அருள்உணர்வு ஓங்கும்பொழுது உள்ளத்தில் உண்டாகும் ஒளி உள்ளத்திலுள்ள அஞ்ஞானத்தைப் போக்குகிறது.கதிரவன் வருகையால் இயற்கையில் உள்ள யாவும் இன்பம் அடைகின்றன. அருள் உணர்வு ஓங்கும் பொழுது உள்ளம் பேரானந்தம் அடைகிறது. அப்பொழுதுஉள்ளத்தில்தெய்வீக இயல்புகள் நிறைகின்றன. ஜீவாத்மன் பரமாத்மனோடு இனைந்து பேரின்பத்தை அடைகின்றான். புற இருளைச் சூரியன் போக்குகின்றான். அக இருளை ஆன்ம ஒளிபோக்குகிறது. சூரியன்வருகையால் இயற்கையில் உள்ள பொருள்களுக்கு உயிர்ச் சக்தியும் வாழ்வும் உண்டாகின்றன. அங்ஙனம் ஆன்ம ஒளி உண்டாவதால் உள்ளத்தில் ஆன்மீக உணர்வும் ஆன்ம

வாழ்வும் உண்டாகின்றன.மனிதனை ஆன்மீக வாழ்வுக்கு எழுச்சியுற்றவனாக்குவது தான் பள்ளியெழுச்சியாகும்.

இறைவன் நம் உள்ளத்தில் யாண்டும் எழுந்தருளிய வண்ணம் இருக்கிறார். அவருடையசான்னித்தியத்தைஉணர்வதற்கு நம்முடைய உள்ளத்தின்கண் ஆன்ம உணர்வை எழுந்தருளச் செய்வதே பள்ளியெழுச்சியாகும். இவற்றை வருமாறு நினைவு கூர்க `ஆவி இளைப்பாற உழைப் பாரவிறை தாள்வேண்டல், மேவு பள்ளி யோடெழுச்சி வேண்டு." வைகறையில் இருள் நீங்கினால் பொழுது புலர்கிறது. அது போன்று மனிதனுடையஅஞ்ஞான இருள் அகன்று போனால் ஞான ஒளி தானே வெளிப்பட்டு விடுகிறது. இதைவிளக்குவதே இறைவனைத் துயில் எழுப்புவதாகப் பாடுவதன் குறிப்பு.

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

1 என்னுடைய வாழ்வுக்கு அடிப்படைக் காரணமான இறையே! நீ வாழ்க! உன்னைப் போற்றுகின்றேன். பொழுது புலர்ந்து விட்டது. பூப் போன்ற உன்திருப்பாதங்களை மலர்களால் தூவுவோம். உன் திரு முகத்தில் தோன்றும் அருள் மிகுந்தஅழகிய புன்னகையைக் கண்டு வணங்குவோம்! தாமரை போன்ற மலர்கள் பூத்திருக்கும் வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறைச்சிவபெருமானே! ரிஷபக் கொடியுடையவனே! எங்களையெல்லாம் அடிமையாக உடையவனே! எம்பெருமானே! எங்கள் இதயப் படுக்கையை விட்டுத் துயில் நீங்கி எழுந்தருள்வாயாக! இறைவனே! பொழுது விடிந்தது. உன் திருவடியை மலர்களைக் கொண்டு அருச்சித்துவணங்க வந்தோம். நீ திருப்பள்ளியெழுந்தருள வேண்டும். எளியேமைக் கொத்தடிமையாக உடையவனே! எங்களின் விழுமிய முதல் தலைவனே! திருப்பள்ளியெழுந்தருள்வாயாக!

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அம் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

2 கீழ்த்திசையிலே அருணன் புறப்பட்டு வந்து விட்டான். இருள் நீங்கி விட்டது. உன் திருமுகத்தில் காணும் கருணையைப் போல் சூரியன் உதித்துவிட்டான். உன்கண்களைப் போன்ற நறுமலர்கள் மலர்கின்றன. கண்ணீர் துளித்த எங்கள் கண்களைப் போன்ற வண்டினங்கள் முரல்கின்றன. திருப்பெருந்துறையில் வாழும்

சிவபெருமானே அருள் செல்வங்களையெல்லாம் வாரிவழங்கும் ஆனந்த அருள் மலையே! அலைகடலே! நீ பள்ளியெழுந்தருள்வாயாக! சூரியன் கீழ்த்திசையில் உதித்து விட்டான். இருள் நீங்கிற்று. வண்டுகள்மலர்களில் ஆரவாரிக்கின்றன. நீ திருப்பள்ளியெழுந்தருள வேண்டும்.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய் எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.3

3 திருப்பெருந்துறை வாழ் தீந்தமிழ்ச் சிவ பெருமானே! செருக்கு அறாஇயல்பினர் பெரியாராயினும் அவராலும் அறிதற் கரியவனே! நும் திருவருட்டுணையால் நும்மைப் புகலெனப் பூண்டொழுகும் அடியெங்கள் மாட்டுளளிமையாய் எழுந்தருள்பவனே! எம் பெரு முதல்வனே! அழகிய குயில்கள் கூவின. கோழிகளும் கூவின! பின் முறைமுறையே ஏனைப்பறவைகளும் ஒலித்தன. வெள்ளிய திருச்சங்குகளும் மிக்கு இசைத்தன. நாள் எனக் கூறப்படும் விண் மீன்களும் ஒளி மழுங்கின. பகலவன் ஒளிநிகரின்றி ஒன்று கூடித் தோன்றுகிறது. எளியேங்கட்குப் பேரளியுடன் கூடிய பெரும்பொருளே! ஆண்மைக் கழலணிந்த உன்னுடைய நல்ல திருவடியினைக் காட்டியருள்வாயாக! அதன் பொருட்டுத் திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக! குயில்கள் கூவின; கோழிகள் கூவின. வேறு பறவைகளும் கத்தின. சூரியனும்உதித்தான்.உடுத்திரள்கள் ஒளி மழுங்கின. உன் திருவடியை யாம் கண்டு சேவிக்க நீதிருப்பள்ளியெழுந்தருள வேண்டும்.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.4

4 திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானே! இதோ பார். உன்சந்நிதியில் வீணை இசைப்பவரும், யாழ்களை இசைப்பவரும் ஒருபக்கம் நிற்கிறார்கள். இன்னொரு பக்கம் வேதம் ஓதுவாரும் தோத்திரம் பாடுவோரும் நிற்கிறார்கள்.வேறு ஒரு பக்கத்தில் தூய மலர் மாலைகளை ஏந்திக் கொண்டு சிலர் காணப்படுகிறார்கள். மற்றொரு பக்கத்தில் தொழுது சிரமேல் கை கூப்பி அஞ்சலி செய்பவர்களும்,தமை மறந்து கை துவள நிற்பவர்களுமாகச் சிலர் இருக்கிறார்கள். அடியேனையும் அவர்களோடு ஆட்கொண்டு அருள் புரிய திருப்பெருந்துறை வாழ்சிவபெரு மானே, துயில் நீங்கி எழுந்தருள்வாயாக! வீணை, யாழ், வாத்தியக்காரர் வேத முதலானவற்றைக் கொண்டு தோத்திரம்செய்வோர் பூமாலை யேந்திய கையினையுடையவர் வணங்கிக் கூப்பிய கையினையுடையோர் ஆகிய எல்லோரும் வந்திருக்கிறார்கள். நீ திருப்பள்ளியெழுந்தருள வேண்டும்.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்

கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனை கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

5 நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐந்து பூதங்களிலும் நீ உறைந்திருக்கிறாய். உனக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை என்றெல்லாம் கற்றறிந்தபெருமக்கள் புகழ்ந்து பாடுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் உன்னை நேரில் கண்டவர்கள் என்று யாரையும், யாரும் பார்த்ததில்லை. எண்ணத்திற்கும் எட்டாத எம் பெருமானே! திருப்பெருந்துறை அரசே! எங்களுக்குமுன்னால் வந்து காட்சி தந்து எங்கள் குற்றங்களைப் போக்கி அருள்வதற்குப் பள்ளி எழுந்தருள்வாயாக! எல்லாப் பூதங்களிலும் நிறைந்து நின்றவன். போக்கு வரவற்றவன் என்று அறிஞர்உன்னைக் கீதங்கள் பாடிக் களித்தாடுவதல்லாமல் உன்னைக் கண்டறிவாரைக் கேட்டுமறியோம்.திருப்பெருந்துறை இறைவனே! எமது பிறவித் துயரறுத்து ஆண்டு கொண்டருள வல்ல எம் பெருமானே, நீ திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.6

6 பரப்பு இல்லாத வெளியிடத்தில் தவம் செய்து அருள் பெற்ற உன் அடியார்களும், பந்தங்கள் பாச வினைகள் இவற்றை அறுத்து நின்றவர்களும் மை தீட்டிய கண்களையுடையபெண்களாகிய நாயகி பாவனை கொண்டு உன்னை வணங்குகிறார்கள். செந்தாமரை மலர்களும் நீர் நிறைந்த பசிய வயல்களும் கொண்டதிருப்பெருந்துறை வாழ் சிவ பெருமானே! எங்கள் பிறவித் துயர் நீக்கி அருள் புரியப்பள்ளி எழுந்தருள்வாயாக! திருப்பெருந்துறை சிவபெருமானே உன்னடியார் முதலிய யாவரும் வந்து வணங்காநின்றனர். நீ திருப்பள்ளி யெழுந்தருள வேண்டும்.

அதுபழச் சுவைஎன அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருஉரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.7

7 பரம் பொருளான நீ பழச்சுவையோ? அமிர்தம் போன்ற பொருளோ? அறியமுடியாத வஸ்துவோ? எளிதில் காணும் பொருளோ? என்பதையெல்லாம் தேவர்களும் அறியமாட்டார்கள். `இதுதான் இறைவன் திருவுருவம்! இவன்தான் இறைவன்' என்று நிச்சயமாக நாங்கள்உணரும்படி எங்களை ஆட்கொண்டு அருள் செய்வாயாக! தேன்

சொரியும் சோலைகளையுடைய உத்திர கோசமங்கையில் இருப்பவனே! திருப்பெருந்துறை அரசே! எங்களை நீ அடிமைக் கொள்ளும்படிச் செய்யும் வழியை எடுத்துக்காட்டுவதற்கு நீ பள்ளியெழுந்தருள்வாயாக! திருப்பெருந்துறை சிவபெருமானே! தேவரும் உள்ளவாறறியாத உன்னை யாம்அறிந்துய்யும்படி எம்மை ஆட்கொண்டு திருவுத்தரகோச மங்கையில் எழுந்தருளினவனே எம்மைப் பணிகொள்ளும் வழி யாது? சொல்லுவாயாக! நீ திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற்றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறைஉறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

8 உலகத்துக்கு அடி நடு முடிவும் ஆனவனே! பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகியமூவராலுமே உன்னுடைய தன்மையைக் கண்டறிய முடியவில்லை என்றால் வேறு எவரால்தான் அறியமுடியும்? பந்தாடும் காந்தள் விரல்களையுடைய பார்வதியுடன் அடியார்களது இதயக்குடிசைகளிலெல்லாம் எழுந்தருளிய பரமேசுவரனே! செந்தழல் சோதி போன்ற உன் திருமேனியையும் திருப்பெருந்துறைக்கோயிலையும் காட்டி, அந்தண வேடத்தில் குருமூர்த்தியாகவும் தோன்றி என்னை ஆட்கொண்டுவிட்ட அமுதமே! பெருமானே! நீ பள்ளி எழுந்தருளாயே! முதல் இடை கடையானவனே! உம்மை மூவர் அறியாரெனின் வேறு யாவர் தாம்அறிய வல்லார். எம்பிராட்டியும் நீயுமாக எம்மில்லங்கள் தோறும் எழுந்தருள்பவனே உன்திருமேனியையும் திருப்பெருந்துறைக் கோயிலையும் வேதிய வேடத்தையும் காட்டி வந்து எங்களைஆண்டருளின அரிய அமிர்தமே நீ திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயிர் ஆனாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.9

9 விண்ணுலகில் வாழும் தேவர்களும் அணுக முடியாத நுண்ணிய பரம்பொருளே! உன்பாதமே கதியென்று கிடக்கும் அடிமைகளாகிய எங்களை, கண்ணினுள் பாவை போல் வாழச்செய்யத் திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே! அடியார்களின் கண்கள் களிக்கக் காட்சி அளிக்கும் தேனே! கடைந்தெடுத்த அமுதமே! கரும்பே! உலகுக்கு உயிர் ஆனவனே! எம் பெருமானே! பள்ளி எழுந்தருள்வாயாக! தேவர்களும் அணுகவொண்ணாத மேலாகிய பொருளே! உன் தொண்டராகிய யாம்வாழும் பொருட்டு இம் மண்ணுலகில் எழுந்தருளினவனே! திருப்பெருந்துறையானே! எமது கண்களிக்க வந்தவனே! உலகுக் குலகாயிருப்பவனே! நீ திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்!

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி

சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறைஉறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவுன் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணயும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

10 பூமியில் பிறக்காமலிருந்து நாம் வீணாக நாளைக் கழித்தவர்களாகிவிட்டோம். சிவபெருமானுடைய திருவருளால் அனைவரும் கடைத்தேறக் கூடிய இடம் இந்தப்பூமியேயாகும்' என்று கருதி, திருமாலும் பிரம்ம தேவனும் இந்தப் புவியில் வந்துஅவதரிக்க வெகுவாக ஆசைப்படுகிறார்கள். உன் பரந்த மெய்க்கருணையோடு இவ்வுலகுக்கு வந்து எங்களையெல்லாம் ஆட்கொள்ளவல்ல திருப்பெருந்துறைச் சிவப்பெருமானே! அமுதம் போன்றவனே! பள்ளியெழுந்து எங்களுக்குஅருள்வாயாக! இறைவனே! திருமாலும் பிரமனும் `நாம் பூமியிற் போய்ப் பிறவாமையால்வீணே காலங்கழிக்கின்றோம். இறைவன் ஆன்மாக்களை உய்யக் கொள்ளுமிடம் இந்த பூமியேஆகும் என்று நோக்கி ஆசைப்படா நிற்க, பூமியில் எழுந்தருளி எம்மை ஆட்கொள்ளவல்லவனே, நீ திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்! கருணையும் நீயும் என்றது இறைவன் எப்பொழுதும் கருணையோடு கூடியே  இருப்பவன்என்பதை வற்புறுத்தற்கென்க!

திருச்சிற்றம்பலம்.
ஓதுவார்